# முதல் இடைப்பருவத் தேர்வு - 2024

## பத்தாம் வகுப்பு

## தமிழ்

பதிவு எண் : 6 8 0 2 6

நேரம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

### பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 7 x 1 = 7

1. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை ________.
   அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
2. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் ________.
   அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
   இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
3. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது ________ எனப்படும்.
   அ) தொடர் மொழி ஆ) தனிமொழி இ) பொதுமொழி ஈ) வெறும் மொழி
4. 'பாடுஇமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
   அ) கடல்நீர் ஒலித்தல் ஆ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல்
   இ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்
5. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ________.
   அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்
6. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது ________.
   அ) புத்தூர் ஆ) பேரூர் இ) மூதூர் ஈ) சிற்றூர்
7. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
   அ) துலா ஆ) குலா இ) இலா ஈ) சீலா

### பகுதி - II

#### பிரிவு - 1

குறுகிய விடையளிக்க. (9-வது வினா கட்டாய வினா) 2 x 2 = 4

8. விடைக்கேற்ற வினா அமைக்க.
   அ) திருந்திய மக்களை மற்ற உயிர்களின்று பிரித்து காட்டுவது மொழி.
   ஆ) உலக காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடம் பெற்றுள்ளது.
9. 'விடும்' என முடியும் திருக்குறளை அடி மாறாமல் எழுதுக.

#### பிரிவு - 2

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 3 x 2 = 6

10. 'வேங்கை' என்பதை தொடர் மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
11. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.
12. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
13. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

### பகுதி - III

#### பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 x 3 = 6

14. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.
15. கண்ணே கண்ணுறங்கு !
    காலையில் நீயெழும்பு !
    மாமழை பெய்கையிலே !
    மாம்பூவே கண்ணுறங்கு !
    பாடினேன் தாலாட்டு
    ஆடி ஆடி ஓய்ந்துறங்கு - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

16. காசிக்காண்டம் உணர்த்தும் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கங்களைக் கூறுக.
17. அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது இவை அனைத்தையும் யாம் அறிவோம். அது பற்றி உமது அறிவுரை எமக்குத் தேவையில்லை. எல்லாம் எமக்குத் தெரியும்.
 - இக்கூற்றில் அடிக்கோடிட்ட எழுத்துக்களில் உள்ள வினை முற்றுகளைத் தொழிற் பெயர்களாக மாற்றி எழுதுக.

1 x 3 = 3

பிரிவு - 2

பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

18. தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும். பாட்டும் வசனமும் இல்லாத ஆட்டங்களில் புலி ஆட்டமும் ஒன்று. விழாக்களில் புலி வேடமிடுவோர் உடம்பெங்கும் புலியைப் போன்று கறுப்பும் மஞ்சளுமான வண்ணக் கோடுகளையிட்டுத் துணியாலான வாலை இடுப்பில் கட்டிக் கொள்வர். தப்பு மேளத்திற்கேற்ப ஒருவரோ, இருவரோ ஆடுவர். புலியைப் போன்று நடந்தும் பதுங்கியும் பாய்ந்தும் எம்பிக் குதித்தும் நாக்கால் வருடியும் பற்கள் தெரிய வாயைப் பிளந்தும் உறுமியும் பலவேறு அடவுகளை வெளிப்படுத்துகின்றனர்.
    1. புலி ஆட்டமாவது யாது?
    2. புலி ஆட்டத்தில் பாட்டும் வசனமும் உண்டா?
    3. புலி வேடமிடுவோர் தங்களை எவ்வாறு அலங்கரித்துக் கொள்வர்?

1 x 3 = 3

19. அலகிட்டு வாய்பாடு எழுது.
 உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
 கல்லார் அறிவிலா தார்

1 x 3 = 3

20. அடி மாறாமல் எழுது.
 "தென்னன் மகளே" எனத் தொடங்கும் அன்னை மொழியே பாடலை எழுது. (அல்லது)
 "சிறுதாம்பு தொடுத்த" எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடல் எழுதுக.

பிரிவு - 3

2 x 3 = 6

21. காட்சியை கண்டு கவிதை எழுதுக.



22. தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
23. தமிழில் மொழிபெயர்க்க.
 Language is the road map of a culture. It tells you where it's people come from and where they are going. - Rita Mae Brown

பகுதி - IV

பிரிவு - 1

1 x 5 = 5

24. "சான்றோர் வளர்த்த தமிழ்" என்னும் தலைப்பில் கட்டுரை வரைக. (அல்லது)
25. மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி கட்டுரை எழுதுக.

பிரிவு - 2

1 x 7 = 7

26. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க. (அல்லது)
 முல்லைப் பாட்டிலுள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

******